(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 36 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2008, நவெம்பர் 07, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0071 / ' 08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அதிமேதகு சனாதிபதி வெளிநாட்டுக்கு மேற்கொண்ட பயணங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) நாடுகளின் பெயர்களையும்,

(iii) உடன் சென்றவர்களின் எண்ணிக்கையையும்,

(iv) உடன் சென்றமைக்கான காரணங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்த வெளிநாட்டுப் பயணங்களுக்காக ஏற்பட்ட செலவையும்,

(ii) அந்தப் பயணங்களினால் நாட்டுக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க பயனையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0072 / ' 08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை (CEB)யின் இலாபத்தினையும்,

(ii) இலங்கை மின்சார சபையின் மொத்தப் பொறுப்புக்களையும்

1994 ஆம் ஆண்டு ஏப்பிறல் 25 இல் உள்ளவாறாகவும் இன்றுள்ளவாறாகவும் அவர்இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1994 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரையில் மின்வலுத்துறையில் பெரும் முன்னேற்றம் அல்லது வளர்ச்சி ஏற்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அவை என்னவென்றும், அதற்கான சான்றுகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) நுகர்வோரிடமிருந்து அறவிடப்படுகின்ற தொகையினை -

(i) 1994 ஆம் ஆண்டு ஏப்பிறல் 25 இல் உள்ளவாறும், இன்றுள்ளவாறும் வெவ்வேறாகவும்,

(ii) இலங்கை மின்சார சபையிடமிருந்தான தலாநபர் கடனை 1994 ஆம் ஆண்டு ஏப்பிறல் 25 இல் உள்ளவாறாகவும் இன்றுள்ளவாறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0074 / ' 08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2006 ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டம் ஊடாக, மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவர்களுக்கு (RADA) பணம் ஒதுக்கப்பட்டதா என்பதையும்,

(ii) இந்தப்பணம் RADA விற்கு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத் தலைப்பு மூலம் மாற்றி அனுப்பப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அப்பணத்தொகையையும் திகதியையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பி அன் கே கோல்டிங்ஸ் லிமிட்டெட் ஊடாக வழங்கப்பட்ட பணத்தில் இருந்துதான் வீடுகள் கட்டப்பட்டன என்ற விடயத்தை அரசாங்கம் கவனத்தில் எடுத்து விசாரித்ததா என்பதையும்,

(ii) அவ்வாறு அவர்களால் பின்தொடர் நடவடிக்கை எடுக்க முடியாது இருப்பின், அதை இவர்களுக்கு வழங்கியதற்கான காரணம் என்ன எனவும்

(iii) இது வெளிப்படையாகவே அரசாங்கத்தால் உந்தப்பட்ட ஒரு "பகற் கொள்ளையல்லவா" என்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0165 / ' 08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாடுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பிலியந்தல, கஹபொல, றெஜிடேல்வத்தயை விற்பனை செய்தல் தொடர்பாகவும் சமரக்கோன் முதுசொத்து தொடர்பாக ஏற்பட்டுள்ள குளறுபடிகள் தொடர் பாகவும் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தில் பொதுச் சொத்துக்கள் தொடர்பாக எழுந்துள்ள பல்வேறு ஊழல்கள் தொடர்பாகவும் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கட்ட விசாரணை அறிக்கையொன்று வெளியிடப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள மேற்படி அறிக்கையின் பிரகாரம் குற்றச்சாட்டிற்கு உள்ளாகியவர்கள் தொடர்பாகவும், ஏற்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0166 / '08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிலியந்தல, ரெஜிடேல் தோட்டத்தின் காணி, முதலீட்டு சபையின் அங்கீகாரம் பெற்ற மிலேனியம் சிட்டி வீடமைப்பு கருத்திட்டத்திற்காக செலிங்கோ டெவலப்பர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த தென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக இக்காணியை விற்பனை செய்யும் செயற்பாடு, சட்ட விரோதமானதென்றும், சூழலுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய தென்றும் தெரிவித்து மக்களின் எதிர்ப்பு எழுந்ததென்றும்,

(iii) இதற்கமைய மேற்படி வீடமைப்பு கருத்திட்டம் இரத்துச் செய்யப்பட்ட தென்றும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீடமைப்புத் திட்டம் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர், இக்காணி தொடர்பாக பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) காணியின் மொத்த பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(iii) இக்காணி தொடர்பிலான திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0197 / ' 08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்பு (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோக பூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0368 / ' 08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அபிவிருத்தி லொத்தர் சபையின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக உள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றுள் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சொந்தமான வாகனங்கள் யாவை யென்பதையும்,

(iii) அவற்றின் வகை மற்றும் பதிவு இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி நிறுவனத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப் பட்ட வாகனங்கள் யாவை என்பதையும்,

(v) மேற்படி வாகனங்களின் வகை, இலக்கம் மற்றும் மாதாந்த வாடகை ஆகிய விபரஙகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வாகனங்களை பயன்படுத்துவது யாரென்பதையும்,

(ii) மேற்படி வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்தப்படும் எரிபொருளின் பெறுமதி யாதென்பதையும்,

(iii) வாடகை அடிப்படையில்பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளவாகனங்களின் உரிமையாளர்கள் யாரென்பதையும்,

(iv) மேற்படி வாகன உரிமையாளர்களுக்கும் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவருக்குமிடையேயுள்ள தொடர்பு எவ்வகையானதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0369 / ' 08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அபிவிருத்தி லொத்தர் சபையின் உடனடி சீட்டிலுப்புக்கான பிரதான பரிசில்களை வழங்குவதெற்கென தொலைக்காட்சிப் பெட்டிகள், “ரோட் மாஸ்டர்” மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கு ஏதேனும் கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரம் கோரப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப் பட்ட விலை விபரங்கள் யாவையென்பதையும்,

(iii) கேள்விப்பத்திரங்கள் எந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதென்பதையும்,

(iv) சம்பந்தப்பட்ட வேள்விப்பத்திரச் சபையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) கேள்விப்பத்திரச் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0370 / ' 08

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யுத்தத்தின் போது மரணம் அடைகின்ற இராணுவ வீரர்களின் குடும்பங்களைச் சேர்ந்த நெருங்கிய உறவினர்களுக்கு உரித்துக்கள் வழங்கப்படும் போது இராணுவ வீரர்களின் பெற்றோர் புறக்கணிக்கப்படுகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) திருமணமாகிய இராணுவ வீரர் ஒருவர் மரணம் அடையும் சந்தர்ப்பத்தில் அனைத்து கொடுப்பனவுகளும் உரித்துகளும் நெருங்கிய உறவினர்களாக கருதப்படுகின்ற மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் மாத்திரம் கிடைக்கின்றதென்பதையும்,

(ii) இதன்காரணமாக மிகவும் கஷ்டங்களுக்கு மத்தியில் பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் பெற்றோர்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகின்றார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) எனவே, மரணமடைந்த இராணுவ வீரர்களின் பெற்றோர்களின் நலன் கருதி ஏதேனும் கொடுப்பனவொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு அவர் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வாரா

(ஈ) இன்றேல், ஏன்?

0641 / ' 08

10.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— துணைப்பயிர் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சம்பந்தப்பட்ட அமைச்சின் கீழ் துணைப்பயிர்களாகக் கருதப்படுகின்ற பயிர்கள் யாவையென்பதையும்,

(ii) இவற்றுள் ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற பயிர்கள் யாவையென்பதையும்,

(iii) அவை பயிரிடப்படுவதாக இனங்காணப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்,

(iv) மேற்படி, மாவட்டங்களில் உரிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற ஹெக்டயர் அளவு தனித்தனியாக எத்தனை எண்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) ஏற்றுமதி செய்யப்படுகின்ற மேற்படி ஒவ்வொரு பயிர்வகையினையும் விஸ்தரிப்பதற்காக அந்தந்த மாவட்டம் சார்பாக 2008 ஆம் ஆண்டின் பொருட்டு ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு கூறுவாரா?

(இ) அந்நியச் செலாவணியை பெருமளவில் ஈட்டித்தரக் கூடியதென இனங்காணப் பட்டுள்ள பயிர்வகைகளை விஸ்தரிப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0642 / '08

11.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி நாகொட பிரதேச செயலகப் பிரிவில் 2003 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக முழுமையாக அழிந்த 54 வீடுகள் அமைந்திருந்த இடங்கள் பாதுகாப்பற்றதென அரசாங்க அதிகாரிகள் இனங்கண்டனர் என்பதையும்,

(ii) இவர்களுக்கு நாகொட, தல்கஸ்வலயில் அரசாங்கம் சுவீகரித்துக் கொண்ட தோட்டத்தில் காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு காணி அமைச்சு விதப்புரை செய்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாராளுமன்ற ஆலோசனைக்குழுவின் பிரேரணை இலக்கம் 860 மற்றும் 1433 இன்படி இவர்களுக்கு நிலுவை நட்ட ஈடு வழங்குவதற்காக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சினால் தேவையான பணம் நாகொட பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) நாகொட பிரதேச செயலாளரினால் மேற்படி நிலுவை நட்ட ஈட்டுத் தொகை 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி மீண்டும் பொதுத்திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மக்கள் பிரதிநிதிகளினாலும் சம்பந்தப்பட்ட காணி பெறுநர்களினாலும் தொடர்ச்சியாக வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டாலும் இதுவரை வீடுகள் அழிந்து போனவர்களுக்கு பிரதேச செயலாளர் காணிகளை வழங்கவில்லை யென்பதால் உரிய விதப்புரை செய்யப்பட்ட காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு எவ்வளவு காலவரையறைக்குள் நடவடிக்கை யெடுக்கப்படும் என்பதையும்,

(ii) விதப்புரை செய்யப்பட்ட காணிகள் வழங்கப்படுவதை தாமதிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென் பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0643 / ' 08

12.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் (மாகாண சுகாதார சேவை அடங்கலாக) பணியாற்றுகின்ற சுதேச மருத்துவ முறையுடன் இணைந்து ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி மருத்துவர்களின் எண்ணிக்கையும் இவர்கள் பணியாற்றுகின்ற வைத்தியசாலைகளும் வெவ்வேறாக யாவை,

(ii) தற்போது வைத்தியசாலைகளில் நிலவுகின்ற மருத்துவர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை,

(iii) கம்பஹ விக்கிரமாரச்சி மருத்துவக் கல்லூரி, பொறளை சுதேச மருத்துவக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் சுதேச மருத்துவக் கல்லூரி என்பவற்றிலிருந்து மருத்துவப்பட்டம் பெற்று தற்போது வேலையின்றி உள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனை,

(iv) கம்பஹ விக்கிரமாரச்சி மருத்துவக் கல்லூரியில் டிப்ளோமாதாரிகளாக சித்தியெய்திய மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனை,

(v) தற்போது சுதேச மருத்துவக்கல்லூரியிலிருந்து சித்தியடைகின்ற சகலரும் பட்டதாரிகள் என்பதால் மேற்படி டிப்ளோமாதாரிகள் சகலருக்கும் தொழில் வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டம் உருவாக்கப்படுமா

என்பதை அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(ஆ) தற்போது பட்டப்பரீட்சையில் சித்தியெய்தியுள்ள சுதேச மருத்துவர்கள் சகலருக்கும் 2008 ஆம் ஆண்டில் தொழில் வழங்குவதற்கு எவ்வளவு காலவரையறைக்குள் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0673 / ' 08

13.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசனங்களுக்குரிய குளங்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) இக்குளங்களுக்காக, ஒதுக்கப்பட்ட காணிப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) இவ்வொதுக்கக் காணிகளை அடையாளம் காண்பதற்காக இறுதியாக நில அளவை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு யாது,

(iv) ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்கள் உள்ளனரா,

(v) அவ்வாறாயின், அவர்கள் ஏதேனும் சட்டபூர்வமான அடிப்படையில் குடியிருக்கின்றனரா,

(vi) அதற்கான ஆண்டு, அடிப்படை மற்றும் எவ்வளவு காலத்திற்கானது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு குடியிருப்ப வர்களின் பெயர் முகவரி ஆகியவை சிறு நீர்ப்பாசனம் மற்றும் பெரிய நீர்ப்பாசன அடிப்படையில் வெவ்வேறாக யாவை,

(ii) குள ஒதுக்கங்களில் குடியிருப்பவர்களுக்கு வழங்க மாற்றுக் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா,

(iii) அவ்வாறாயின், அவ்விடங்கள் யாவை,

(iv) மாற்றுக்காணிகள் இனங்காணப்படவில்லையாயின் அவற்றை வழங்கு வதற்காக எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0674 / ’08

14.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்லம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசனங்களுக்குரிய குளங்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) இக்குளங்களுக்காக, ஒதுக்கப்பட்ட காணிப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) இவ்வொதுக்கக் காணிகளை அடையாளம் காண்பதற்காக இறுதியாக நில அளவை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு யாது,

(iv) ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்கள் உள்ளனரா,

(v) அவ்வாறாயின், அவர்கள் ஏதேனும் சட்டபூர்வமான அடிப்படையில் குடியிருக்கின்றனரா,

(vi) அதற்கான ஆண்டு, அடிப்படை மற்றும் எவ்வளவு காலத்திற்கானது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு குடியிருப்ப வர்களின் பெயர் முகவரி ஆகியவை சிறு நீர்ப்பாசனம் மற்றும் பெரிய நீர்ப்பாசன அடிப்படையில் வெவ்வேறாக யாவை,

(ii) குள ஒதுக்கங்களில் குடியிருப்பவர்களுக்கு வழங்க மாற்றுக் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா,

(iii) அவ்வாறாயின், அவ்விடங்கள் யாவை,

(iv) மாற்றுக்காணிகள் இனங்காணப்படவில்லையாயின் அவற்றை வழங்கு வதற்காக எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0675 / ’08

15.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முந்தல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறு நீர்ப்பாசன மற்றும் பெரிய நீர்ப்பாசனங்களுக்குரிய குளங்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) இக்குளங்களுக்காக, ஒதுக்கப்பட்ட காணிப்பரப்பு வெவ்வேறாக எவ்வளவு,

(iii) இவ்வொதுக்கக் காணிகளை அடையாளம் காண்பதற்காக இறுதியாக நில அளவை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு யாது,

(iv) ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்கள் உள்ளனரா,

(v) அவ்வாறாயின், அவர்கள் ஏதேனும் சட்டபூர்வமான அடிப்படையில் குடியிருக்கின்றனரா,

(vi) அதற்கான ஆண்டு, அடிப்படை மற்றும் எவ்வளவு காலத்திற்கானது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட ஒதுக்கக் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு குடியிருப்பவர்களின் பெயர் முகவரி ஆகியவை சிறு நீர்ப்பாசனம் மற்றும் பெரிய நீர்ப்பாசன அடிப்படையில் வெவ்வேறாக யாவை,

(ii) குள ஒதுக்கங்களில் குடியிருப்பவர்களுக்கு வழங்க மாற்றுக் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா,

(iii) அவ்வாறாயின், அவ்விடங்கள் யாவை,

(iv) மாற்றுக்காணிகள் இனங்காணப்படவில்லையாயின் அவற்றை வழங்குவதற்காக எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — (ஒதுக்கப்பட்ட முதலாம் நாள்) - விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (நவெம்பர் 06) [1].

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

| | | |
|---|---|---|
| **<u>தவிசாளர் (முழு நேர)</u>** | | |
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |
| **<u>உறுப்பினர்கள்</u>** | | |
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு

முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உபதவிசாளரினதும் சம்பளம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உப தவிசாளர்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 50,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 62,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஆணைக்குழுவின் உப தவிசாளர் பதவியில் பணியாற்றியுள்ள பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் தற்போது அப்பதவியை வகித்துவரும் கலாநிதி ஜீ.டி. குணவர்தன அவர்களுக்கும் இச்சம்பள அதிகரிப்பு ஏற்புடையாதாக வேண்டுமெனவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

*10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

### 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு” — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **II** இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

*11.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*13.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*14.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*15.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*19.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*20.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*24.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*25.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*26.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*27.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*28.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*29.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

30.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.